**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் 2015–2016 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த தொடராணை மற்றும் ரூ.75,00,000/–நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.2(1))த் துறை

அரசாணை (2D) எண்.03

நாள் : 27–07–2015
மன்மத, ஆடி 11,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.74, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 28–11–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2121/இவாததி–1/2015, நாள் 9.6.2015.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், இலவச உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.75,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மூன்று சக்கர சைக்கிள்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், பிளாஸ்டிக் மற்றும் மெட்டாலிக் காலிப்பர்கள், கறுப்பு கண்ணாடிகள், மடக்கு குச்சிகள், பிரெய்லி கைக்கடிகாரங்கள், கால்தாங்கிகள், ஊன்று கோல்கள், செயற்கை அவயங்கள், காதொலி கருவிகள் மற்றும் சூரிய ஒளியினால் சக்தி பெறும் பாட்டரிகள் போன்ற உதவி உபகரணங்களுடன் பார்வையற்றவர்களுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவியினையும் (Magnifier) சேர்த்து, இத்திட்டத்தினை 2015–2016 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கென ரூ.75.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு அதனை ஏற்று, 2015–2016 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விலையில்லா உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு, ரூ.75,00,000/– (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இத்தொகையை பெற்று, உரியவாறு செலவினம் மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | உதவி உபகரணங்கள் விவரம் | | தேவையான எண்ணிக்கை | ஒன்றின் விலை (தோராயமாக) ரூ. | நிதி ஒதுக்கீடு கோரும் தொகை ரூ. | | வாங்கும் முறை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மூன்று சக்கர சைக்கிள் | | 320 | ரூ.6,490/– | ரூ.20,76,800/– | | தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் |
| 2 | சக்கர நாற்காலி | | 360 | ரூ.6,050/– | ரூ.21,78,000/– | | |
| 3 | பிளாஸ்டிக் காலிபர் (முழுவதும் வடிவமைக்கப்பட்டது) | | | | | | |
| | 1.AFO(Unilateral) | 216 | 55 | ரூ.1,210/– | ரூ.66,550/– | ரூ.7,30,840/– | |
| | 2.AFO(Bilateral) | | 36 | ரூ.2,090/– | ரூ.75,240/– | | |
| | 3.KAFO(Unilateral) | | 55 | ரூ.3,300/– | ரூ.1,81,500/– | | |
| | 4.KAFO(Bilateral) | | 25 | ரூ.6,600/– | ரூ.1,65,000/– | | |
| | 5.HKAFO(Unilateral) | | 25 | ரூ.4,290/– | ரூ.1,07,250/– | | |
| | 6. HKAFO(Bilateral) | | 20 | ரூ.6,765/– | ரூ.1,35,300 /– | | |
| 4 | மெட்டல் காலிபர் (முழுவதும் வடிவமைக்கப்பட்டது) | | | | | | |
| | 1.AFO(Unilateral) | 135 | 40 | ரூ.1,760/– | ரூ.70,400/– | ரூ.4,83,670/– | |
| | 2.AFO(Bilateral) | | 11 | ரூ.2,750/– | ரூ.30,250/– | | |
| | 3.KAFO(Unilateral) | | 45 | ரூ.3,850/– | ரூ.1,73,250/– | | |
| | 4.KAFO(Bilateral) | | 12 | ரூ.6,600/– | ரூ.79,200/– | | |
| | 5.HKAFO(Unilateral) | | 20 | ரூ.4,180/– | ரூ.83,600/– | | |
| | 6. HKAFO(Bilateral) | | 07 | ரூ.6,710/– | ரூ.46,970/– | | |
| 5 | ஆக்சிலரி ஊன்றுகோல் (Auxiliary Crutches) | | 710 | ரூ.325/– | ரூ.2,30,750/– | | |
| 6 | எல்போ ஊன்றுகோல் (Elbow Crutches) | | 410 | ரூ.325/– | ரூ.1,33,250/– | | |
| 7 | சூரிய ஒளியினால் சக்திபெறும் பாட்டரிகள் | | 148 | ரூ.340/– | ரூ.50,320/– | | |
| 8 | கறுப்புக் கண்ணாடிகள் | | 1055 | ரூ.116/– | ரூ.1,22,380/– | | |
| 9 | பிரெய்லி கைக்கடிகாரங்கள் | | | | | | |
| | அ) ஆண்கள் வகை | | 190 | ரூ.880/– | ரூ.1,67,200/– | | |
| | ஆ)பெண்கள் வகை | | 185 | ரூ.880/– | ரூ.1,62,800/– | | |
| 10 | பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி–சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier) | | 87 | ரூ.11,000/– | ரூ.9,57,000/– | | |
| 11 | காதொலி கருவி–வகைகள் | | | | | | |
| | 1. மைல்ட் மோனாரல் | 160 | 20 | ரூ.990/– | ரூ.19,800/– | ரூ.1,92,900/– | |
| | 2. மைல்ட் பைனாரல் | | 20 | ரூ.1,210/– | ரூ24,200/– | | |
| | 3. மாடரேட் மோனாரல் | | 20 | ரூ.990/– | ரூ.19,800/– | | |
| | 4. மாடரேட் பைனாரல் | | 20 | ரூ.1,210/– | ரூ.24,200/– | | |
| | 5. ஸ்ட்ராங் மோனாரல் | | 20 | ரூ.990/– | ரூ.19,800/– | | |
| | 6. ஸ்ட்ராங் பைனாரல் | | 20 | ரூ.1,210/– | ரூ.24,200/– | | |
| | 7. எஸ்ட்ரா ஸ்ட்ராங் மோனாரல் | | 20 | ரூ.1,375– | ரூ.27,500/– | | |
| | 8. எஸ்ட்ரா ஸ்ட்ராங் பைனாரல் | | 20 | ரூ.2,585/– | ரூ.51,700/– | | |
| | **மொத்தம்** | | **3976** | | **ரூ.75,04,210/– (அ) ரூ.75,00,000/–** | | |

4. முன்பக்கம் பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது–CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் 19. இயந்திரம் மற்றும் சாதனமும் 01 வாங்குதல்”.

(கு.தொ.கு. எண்.2235–02–101–CO-1917)

5. மேலும், மேற்படி உதவி உபகரணங்களை உரிய வழிமுறைகளின்படி வாங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்களை பொருத்தவரை, ஆயத்த உபகரணம் வாங்கி வழங்கப்பட இயலாத நிலையில் உள்ளதால் அவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்களை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி வெளிச்சந்தையில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வாங்கி, அவற்றை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல மையங்களிலுள்ள தொழிற்கூடங்களில் ஒன்றிணைந்து பயனாளிகளுக்கு வழங்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி உதவி உபகரணங்களின் விலை, உத்தேச விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பின், அதிகபட்சமாக, ஒப்பளிப்புத் தொகைக்கு மிகாமலும், அதே நேரத்தில், உதவி உபகரணங்களுக்கான தொகை, குறிப்பிடப்பட்ட தொகையைவிட குறைவாக இருப்பின், எஞ்சிய அரசின் நிதி ஒப்பளிப்புத் தொகைக்கு ஏற்ப, கூடுதல் எண்ணிக்கையில் உதவி உபகரணங்களை வாங்கிடவும் அரசு அனுமதியளிக்கிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.39488/நிதி(சந)/2015, நாள் 20.7.2015–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில
ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.
தலைமைக் கணக்காயர் (இருப்பு)
தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.